செ.வெ.எண்.24 நாள்: 16.05.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு தபால் வாக்குகள் மற்றும் மின்னணு முறையில் பதிவான தபால் வாக்குகளை எண்ணுவது தொடர்பாக பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு தபால் வாக்குகள் மற்றும் மின்னணு முறையில் பதிவான தபால் வாக்குகளை எண்ணுவது தொடர்பாக பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.05.2019) நடைபெற்றது.
பயிற்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை வருகிற மே 23 அன்று வாக்கு எண்ணும் மையமான வ.உ.சி. அரசு பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணும் பணிகள் காலை 8 மணி முதல் தொடங்க வேண்டும். முதலாவதாக தபால் வாக்குகளை எண்ண வேண்டும். வாக்கு எண்ணும்போது ஏதேனும் கட்டுப்பாட்டு கருவியில் பழுது ஏற்பட்டால் அந்த கட்டுப்பாட்டு கருவி தனியாக வைத்திருக்க வேண்டும். மேலும் பேட்டரியில் சார்ஜ் குறைவாக இருந்தால் உடனடியாக பேட்டரி மாற்ற வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையும், 17 A படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையும் சமமாக இருக்க வேண்டும். இதில் வித்தியாசம் இருந்தால் அந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை தனியாக வைத்து இறுதியில் எண்ண வேண்டும். வேட்பாளர்கள் அல்லது வேட்பாளர்களின் முகவர்கள் வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தில் உள்ள ஒப்புகை சீட்டுகளை எண்ண வேண்டும் என்று தெரிவித்தால், சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்தான் ஒப்புகை சீட்டுகளை எண்ணுவது தொடர்பாக இறுதி முடிவு எடுக்க வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் ஏதேனும் 5 வாக்காளர் ஒப்புகை சீட்டு இயந்திரத்தில் உள்ள ஒப்புகை சீட்டுகளை எண்ண வேண்டும் என்று தெரிவித்துள்ளது. இப்பணிகளில் இறுதியில் தவறாமல் மேற்கொள்ள வேண்டும். மேலும், வாக்கு எண்ணுவது தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் உடனடியாக கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.மரகதநாதன் (தேர்தல்), திருமதி.சிந்து (நிலம்), தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.நம்பிராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.